# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## முஸ்லிம் திருமண, மணநீக்கம் (திருத்தம்)

**(115 ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண, மணநீக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ 225 ஆம் சட்டமூலம் ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

### *சட்டப்பயன்பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் வாசகங்களினால் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (115 ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண, மணநீக்கச் சட்டத்தின் 18 ஆம் மற்றும் 94 ஆம் பிரிவுகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் கட்டணங்கள் காசாகச் செலுத்தப்பட வேண்டுமெனக் குறித்துரைக்கின்றன.*

# முஸ்லிம் திருமண, மணநீக்கம் (திருத்தம்)

ச.வ.ஓ-16/2013

## (115 ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண, மணநீக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1**. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, முஸ்லிம் திருமண, மணநீக்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 2013 சனவரி 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாக கருதப்படுதலும் வேண்டும்.

*(115 ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண, மணநீக்கச் சட்டத்தின் 18ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப் பின்னர் ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) (115 ஆம் அத்தியாயமான) முஸ்லிம் திருமண, மணநீக்கச் சட்டத்தின் 18 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> ‘‘(3) விதித்துரைக்கப்பட்ட கட்டணமானது மணமகனால் செலுத்தப்படுதல் வேண்டும்.’’.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், ‘‘அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியொன்றின்மீது செலுத்தப்படவேண்டிய முத்திரைக் கட்டணம்’’, என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றின்மீது செலுத்தப்பட வேண்டிய கட்டணம்’’, என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*செல்லுபடியாக்குதலும் நட்டோத்தரவாதமும்.*

**4**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந்தேதியிலிருந்து 2013, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடையும் வரை, பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் அல்லது விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட

எவரேனும் ஆளினால் விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியானமுறையில் விதிப்பனவு செய்யப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப் பட்ட காலப்பகுதியின் போது விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்